*01 Aug 2010 12:04:27 AM IST*

**விவசாயிகளின் கவனத்திற்கு; தோட்டக்கலை பயிர் சாகுபடிக்கு செடி, உரம் இலவசம்**

உளுந்தூர்பேட்டை, ஜூலை 31: தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி செய்ய செடி, உரம் இலவசமாக வழங்கப்படும் என்று திருநாவலூர் தோட்டக்கலைத்துறை உதவி இயக்குநர் பி.சுமதி கூறியுள்ளார்.

÷இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு விவரம்: மாற்றுப் பயிர் சாகுபடிக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வரும் இத்தருணத்தில் தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி செய்யும் விவசாயிகளை ஊக்கப்படுத்த அரசு முடிவு செய்துள்ளது.

÷இந்நிலையில் திருநாவலூர் ஒன்றிய தோட்டக்கலைத்துறை மூலம் 2010-11-ம் ஆண்டுக்கு தேசிய தோட்டக்கலை இயக்க திட்டத்தின் மூலம் மா 1 ஹெக்டேர் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு செடி மற்றும் உரம் உள்பட ரூ.9900-ம், முந்திரி ஒரு ஹெக்டேருக்கு செடி மற்றும் உரம் உள்பட ரூ.11500-ம், கொய்யா பயிர் செய்ய ஒரு ஹெக்டேருக்கு செடி மற்றும் உரம், பூச்சி மருந்து உள்பட 18800-ம், வாழை ஒரு ஹெக்டேருக்கு பயிர் செய்ய உரம் மற்றும் பூச்சி மருந்து உள்பட ரூ.7500-ம், மிளகாய் பயிர் செய்ய ஒரு ஹெக்டேருக்கு விதை மற்றும் உரம், பூச்சி மருந்து உள்பட ரூ.11500-ம் மற்றும் சம்மங்கி பூ சாகுபடி செய்ய ஒரு ஹெக்டேருக்கு ரூ.45000-ம் வழங்கப்பட்டு வருகிறது.

÷மேலும் ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தில் வெண்டை, கத்தரி, பூசணி, மிளகாய் விதைகளும், வீட்டு காய்கறி தோட்டத்துக்கு காய்கறி விதை பாக்கெட்களும் விற்பனைக்கு உள்ளது. தேவையான விவசாயிகள் வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் உதவி தோட்டக்கலை அலுவலர்களை அணுகி பெற்றுக்கொள்ளலாம் என்றார்.

*02 Aug 2010 09:16:24 AM IST*

**வாழை சாகுபடியில் அதிக மகசூல் விவசாயிகளுக்கு ஆக.5-ல் இலவசப் பயிற்சி**

கிருஷ்ணகிரி, ஆக. 1: டாக்டர் பெருமாள் வேளாண்மை அறிவியல் மையம் சார்பில் விவசாயிகளுக்கு வாழை சாகுபடியில் அதிக மகசூல் குறித்த இலவசப் பயிற்சி முகாம் வியாழக்கிழமை (ஆகஸ்ட் 5) நடைபெறுகிறது என்று திட்ட ஒருங்கிணைப்பாளர் சுந்தர்ராஜ் கூறியுள்ளார்.

வாழையில் அதிக மகசூல் பெற உகந்த தொழில்நுட்பங்கள் குறித்து நடைபெறும் இப்பயிற்சி முகாமில், பங்கேற்க விரும்புவோர் ஆகஸ்ட் 3-ம் தேதிக்குள் தங்கள் பெயர்களை முன்பதிவு செய்ய வேண்டும். பயிற்சி நாளன்று காலை 9.30 மணிக்குள் வேளாண்மை அறிவியல் மையத்துக்கு வர வேண்டும்.

96595 57716, 94869 88256 என்ற செல்போன் எண்களில் தொடர்பு கொண்டு பெயர்களை பதிவு செய்யலாம்.

"திட்ட ஒருங்கிணைப்பாளர், டாக்டர் பெருமாள் வேளாண்மை அறிவியல் மையம், எலுமிச்சங்கிரி, மல்லிநாயனப்பள்ளி, கிருஷ்ணகிரி' என்ற முகவரியில் தபால் மூலமும் பதிவு செய்யலாம் என்றார் சுந்தர்ராஜ்.

**கரும்பு பயிரிடும் பரப்பளவு அதிகரிப்பு**

கடலூர், ஜூலை 31: தமிழகத்தில் கரும்பு பயிரிடும் பரப்பளவு இந்த ஆண்டு கணிசமாக அதிகரித்து உள்ளதாக தெரியவந்துள்ளது.

÷கரும்பு விலை டன்னுக்கு ரூ. 2 ஆயிரம் என தமிழக அரசு அறிவித்துள்ளதாலும், 10-20 சதவீதம் இயந்திரங்களைப் பயன்படுத்தி கரும்பு நடவு, களை எடுத்தல், கரும்பு சோகையை துண்டுகளாக்கி உரமாக்குதல் போன்றவை குறைந்த செலவில் நடைபெறுவதாலும், இந்த பரப்பளவு அதிகரித்துள்ளதாக வேளாண்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

÷தமிழகத்தில் கடந்த ஆண்டு 9 புதிய சர்க்கரை ஆலைகள் தொடங்கப்பட்டு உள்ளன. இவை நாளொன்றுக்கு 4 ஆயிரம் முதல் 5 ஆயிரம் டன் வரை கரும்பு அரைக்கும் திறன் கொண்டவை.

÷இவற்றையும் சேர்த்து தற்போது, தமிழகத்தில் 44 சர்க்கரை ஆலைகள் உள்ளன.

இவற்றில் 3 ஆலைகள் இயங்கவில்லை. இயங்கும் 41 சர்க்கரை ஆலைகளின் அரவைத் திறன், நாளொன்றுக்கு 1.18 லட்சம் டன்கள்.

÷தமிழகத்தில் 5 லட்சம் விவசாயிகள் கரும்பு பயிரிடுகிறார்கள். கரும்புக்கு கட்டுப்படியான விலை கிடைக்காமல் இருந்ததால் முந்தைய 5 ஆண்டுகளில், தமிழகத்தில் கரும்பு பயிரிடும் பரப்பளவு 40 சதவீதம் அளவுக்குக் குறைந்தது.

÷மேலும் விவசாயத் தொழிலில் நிலவி வரும் ஆள்பற்றாக்குறையும் மின்வெட்டும் தமிழக கரும்பு விவசாயத்தை பாதிக்கத் தொடங்கியது.

÷அக்டோபர் மாதம் தொடங்க இருக்கும் நடப்பு ஆண்டு கரும்பு அரவைப் பருவத்துக்கு, கரும்பு விலை, வண்டி வாடகையையும் சேர்த்து, டன்னுக்கு ரூ. 2 ஆயிரம் என தமிழக அரசு அறிவித்து உள்ளது.

÷கடந்த ஆண்டு கரும்பு விலை டன்னுக்கு ரூ. 1,537-1,540 வரை இருந்தது. எனவே கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது இந்த ஆண்டு விலை கூடுதலாகவும், காலதாமதமின்றி முன்னரே அறிவிக்கப்பட்டதாலும், விவசாயிகளிடையே கரும்பு பயிரிடும் ஆர்வம் அதிகரித்து உள்ளது.

÷இதன் விளைவாக தமிழகத்தில் சென்ற ஆண்டு 3.20 லட்சம் ஹெக்டேராக இருந்த கரும்பு சாகுபடி பரப்பளவு, இந்த ஆண்டு 3.40 லட்சம் ஹெக்டேராக அதிகரித்து உள்ளது.

÷கடலூர் மாவட்டத்தில் கரும்பு சாகுபடி பரப்பளவு கடந்த ஆண்டு 30,221 ஹெக்டேராக இருந்தது இந்த ஆண்டு 34 ஆயிரம் ஹெக்டேராக உயர்ந்துள்ளது.

÷கடந்த ஆண்டு இந்தியாவில் உள்ள சர்க்கரை ஆலைகளில் சராசரியாக 130 நாள்கள் மட்டுமே கரும்பு அரவை நடைபெற்றது. ஆனால் தமிழகத்தில் 170 நாள்கள் அரவை நடைபெற்றது.

÷நடப்பு ஆண்டில் தமிழக சர்க்கரை ஆலைகளில் 170 நாள்கள் கரும்பு அரவை நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

÷கடலூர் மாவட்டத்தில் பெண்ணாடம் சர்க்கரை ஆலை, கடந்த ஆண்டு 6.72 லட்சம் டன் கரும்பு அரைத்தது. இந்த ஆண்டு 8.5 லட்சம் டன்னுக்கு மேல் அரைக்க உத்தேசித்து உள்ளது.

÷நெல்லிக்குப்பம் சர்க்கரை ஆலை கடந்த ஆண்டு 9.23 லட்சம் கரும்பு அரைத்தது. இந்த ஆண்டு 12 லட்சம் டன் அரைக்க திட்டமிட்டு உள்ளது.

÷விவசாயத் தொழிலில் ஏற்பட்டு வரும் ஆள் பற்றாக்குறை, கரும்பு விவசாயத்தை பெரிதும் பாதித்தது. கரும்பு வெட்டுக் கூலியாக மட்டும் டன்னுக்கு ரூ. 400 முதல் ரூ. 800

வரை கொடுக்க வேண்டியது இருக்கிறது.

÷ஆனால் இப்பிரச்னையில் இருந்து தமிழக விவசாயிகள், இயந்திரமயமாதல் மூலம் தற்போது விடுபடத் தொடங்கி இருக்கிறார்கள். கரும்பு வெட்டும் இயந்திரங்களை அனைத்து சர்க்கரை ஆலைகளும் வாங்கி வைத்து, விவசாயிகளுக்கு வாடகைக்கு வழங்கி வருகின்றன. இதனால் வெட்டுக்கூலி டன்னுக்கு ரூ. 200 ஆக்க குறைந்து இருக்கிறது.

÷மேலும் கரும்பு நடவு, களை எடுத்தல், கரும்பு சோகையை துண்டுகளாக்கி உரமாக்குதல் போன்ற கருவிகளையும், சொட்டு நீர்ப்பாசன முறைகளையும் விவசாயிகள் பயன்படுத்தத் தொடங்கி இருக்கிறார்கள்.

÷இதனால் கரும்பு விவசாயத்தில் செலவு குறையத் தொடங்கி இருக்கிறது. இயந்திரங்களின் பயன்பாடு 10 முதல் 20 சதவீதம் என்ற அளவிலேயே உள்ளது.

÷இது குறித்து கரும்பு விவசாயிகள் கூட்டமைப்பின் மாநில செயலர் விருத்தகிரி கூறுகையில், "விவசாய உற்பத்தி 1.6 சதவீதத்துக்குக் குறைந்து விட்டது. விவசாய உற்பத்தியைப் பெருக்க இயந்திரமயமாதல் கட்டாயம் ஆகிவிட்டது. இயந்திரங்களின் விலை அதிகமாக உள்ளது.  கரும்பு அறுவடை இயந்திரத்தின் விலை ரூ. 1.5 கோடி வரை உள்ளது.

÷தொழில்துறைக்கு அரசு பல சலுகைகளை அளிப்பதுபோல், வேளாண் இயந்திரங்களுக்கு விற்பனை வரி, சுங்கவரி, இறக்குமதி வரி உள்ளிட்ட அனைத்து வரிகளையும் ரத்து செய்ய வேண்டும்.

÷÷விவசாய நிலங்கள் அளவு குறுகி இருப்பதும் இயந்திரங்களை பயன்படுத்த தடையாக இருக்கிறது. எனவே விவசாயிகள் கூட்டுப் பண்ணை விவசாயத்துக்கு மாறியாக வேண்டும் என்றார்.

*02 Aug 2010 12:16:19 PM IST*

**தரமான விதைகளை உற்பத்தி செய்யும் உழவர்களுக்கு சிறப்பு கூடுதல் மானியம்**

திண்டுக்கல், ஆக. 1: தரமான விதைகளை உற்பத்தி செய்து தரும் உழவர்களுக்கு அரசு சிறப்பு கூடுதல் மானியம் வழங்க உள்ளது.

வேளாண் தொழிலுக்கு ஆதாரமான இடுபொருள் விதை. தரமான விதைகள் பயன்படுத்தும் போது சுமார் 30 முதல் 35 சதவீதம் வரை கூடுதல் மகசூல் கிடைக்க வாய்ப்பு உள்ளது. தரமற்ற விதைகளைப் பயன்படுத்துவதால் நோய்க் கிருமிகள் வெளி மண்ணில் இருந்து வருவது, முளைப்புத் திறன் பாதிப்பது, குறைந்த மகசூல் தருவது, உரிய வளர்ச்சி இல்லாமல் இருப்பது, அதிகளவு உரங்களையும், தண்ணீரையும் வீணாக்குவது, சற்று கூடுதல் வெப்பத்திலோ, குளிர்ச்சியிலோ காய்ந்து விடுவது, பூச்சி மற்றும் நோய்களுக்கு எளிதில் பாதிப்பது இவைகள் உருவாகும் காரணிகளாகவும் அமைவது போன்ற ஆபத்தான விளைவுகளை உண்டாக்குகிறது.

தரமான விதைகளின் முக்கியத்துவத்தை அரசு உணர்ந்து அதிகளவு தரமான விதைகளை உற்பத்தி செய்ய துரித நடவடிக்கை வருகின்றது. இன்றைய நிலையில் சுமார் 5 சதவீத உழவர்கள் மட்டுமே தரமான விதைகளைப் பெற்று சாகுபடி செய்து வருகின்றனர். அதிகளவில் தரமான விதைகளை உற்பத்தி செய்து அதிகளவு விவசாயிகளுக்கு வழங்க அரசு விதைப்பண்ணை அமைத்தல் திட்டம் செயல்படுத்தி வருகிறது.

வேளாண் துறையில் தரமான விதைகளை உற்பத்தி செய்வதற்கென்று பணியாளர்களை அமர்த்தி சான்று துறைகளின் ஆய்வில் விதைப்பண்ணைகள் அமைக்கப்பட்டு தரமான விதைகளை உற்பத்தி செய்து இருப்பு வைத்து உரிய காலத்தில் விவசாயிகளுக்கு வினியோகம் செய்யப்பட்டு வருகிறது.

தரமான விதைகளை உற்பத்தி செய்து தரும் விவசாயிகளை ஊககப்படுத்திடும் வகையில் நெல் மற்றும் சிறுதானிய விதைகள் கிலோவுக்கு ரூ.2 கூடுதல் வைத்து உள்ளூர் கொள்முதல் விலையுடன் சேர்த்து வழங்கப்படுகிறது. பயறு வகை விதைகளுக்கு உள்ளூர் விலையுடன் ஆதார விதைக்கு ரூ.10, சான்று விதைக்கு ரூ.5 மற்றும் 20 சதவீத ஊக்கத்தொகை மற்றும் மத்திய அரசு மானியம் கிலோவுக்கு ரூ.20 வழங்கப்படுகிறது. எண்ணெய் வித்து விதைகளுக்கு உள்ளூர் விலையுடன் கிலோவுக்கு ரூ.3 வீதம் விலை நிர்ணயம் செய்து வழங்கி வருகிறது.

அரசு மூலம் விதைப் பண்ணை அமைத்து தரமான உற்பத்தி செய்து தர விரும்பும் ஆர்வமுள்ள விவசாயிகள் விதைப்பண்ணை அமைத்து நல்ல பலனை அடையலாம் என

வடமதுரை வேளாண் உதவி இயக்குநர் பெ.பாஸ்கரன் தெரிவித்துள்ளார்.

*02 Aug 2010 09:16:24 AM IST*

**சின்னவெங்காயம் பதப்படுத்தும் கிடங்கு அமைக்கக் கோரிக்கை**

பெரம்பலூர், ஆக. 1: தமிழகத்தில் சின்னவெங்காயச் சாகுபடியில் முதலிடத்திலுள்ள ஆலத்தூர் ஒன்றியத்தில் வெங்காயம் பதப்படுத்தும் கிடங்கு அமைக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

பெரம்பலூர் அருகேயுள்ள பாடாலூரில் தேமுதிக நிர்வாகிகள் ஆலோசனைக்கூட்டம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. கூட்டத்துக்கு, அக் கட்சியின் மாவட்டச் செயலர் துரை. காமராஜ் தலைமை வகித்தார். மாவட்டத் துணைச் செயலர்கள் கரு. சுடர்செல்வன், கே. அமுதவள்ளி, மாவட்ட ஊராட்சி உறுப்பினர் சோ. மதியழகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பெரம்பலூர் பெரம்பலூர் சட்டப்பேரவைத் தொகுதிப் பொறுப்பாளர் ஏ. சின்னசாமி, நிர்வாகிகளின் செயல்பாடு குறித்து பேசினார்.

இந்தக் கூட்டத்தில், நக்கசேலம் கிராமத்தில் இருந்து, சென்னைக்கு நேரடி போக்குவரத்து வசதி ஏற்படுத்த மாவட்ட நிர்வாகம் நடவடக்கை எடுக்க வேண்டும். தமிழகத்தில் சின்ன வெங்காயச் சாகுபடியில் முதலிடம் வகித்து வரும் பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூரில் வெங்காயக் குளிர்ப்பதனக் கிடங்கு அமைக்க வேண்டும். ஆலத்தூர் ஒன்றியம், மேற்குப் பகுதியில் குடிநீர் பற்றாக்குறையைப் போக்க காவிரி குடிநீர் திட்டத்தை விரைவாகச் செயல்படுத்த வேண்டும். ஆலத்தூரைத் தலைமையிடமாக கொண்டு புதிய வட்டாட்சியர் அலுவலகம் அமைக்க வேண்டும்.

பள்ளி மாணவ, மாணவிகளின் நலனைக் கருத்தில்கொண்டு, தொட்டியாப்பட்டி, தேனூர் வழியாக மாவட்டத் தலைநகருக்கு பேருந்து வசதி ஏற்படுத்த வேண்டும். வரும் சட்டப்பேரவைத் தேர்தலைக் கருத்தில் கொண்டு, பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு கிராமத்திலும் தெருமுனை பிரசாரக் கூட்டம் நடத்துவது. தேமுதிக நிறுவனர் பிறந்தநாளையொட்டி, ஒவ்வொரு கிளை கழகத்திலும் கொடியேற்றி, ஏழை, எளிய மக்களுக்கு உதவி செய்வது என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில், பொருளாளர் சீனி. வெங்கடேசன், மாவட்டத் துணைச் செயலர் கண்ணுசாமி, மாநில செயற்குழு உறுப்பினர் ரவி, கேப்டன் மன்றச் செயலர் தவசி அன்பழகன், கலை இலக்கிய அணி செயலர் செந்தில், நிர்வாகிகள் அண்ணாதுரை, பாலு, ரமேஷ், துரை உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

*03 Aug 2010 09:41:17 AM IST*

**பசுமைப் போர்வை திட்டம் தொடக்கம்**

பண்ருட்டி, ஆக. 2: பசுமைப் போர்வை திட்ட தொடக்க விழா புதுப்பேட்டை அரசு மேல்நிலைப் பள்ளியில் அண்மையில் நடைபெற்றது.
÷பள்ளி தலைமையாசிரியர் த.பாண்டியன் தலைமையில் நடைபெற்ற விழாவின் போது பள்ளி வளாகத்தில் மரக் கன்றுகள் நடப்பட்டன. விழாவில் மாவட்ட சுற்றுச் சூழல் அலுவலர் ஆர்.பழனி, எக்ஸ்னோரா அமைப்பு தலைவர் டி.சி.பசுபதி, பசுமைப் படை ஒருங்கிணைப்பாளர் கே.விஸ்வநாதன், உதவி தலைமையாசிரியர் அ.தணிகாசலம் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

© Copyright 2008 Dinamani

தினமலர்
நிறுவனர்: டி. வி. ராமசுப்பையர்

**வாரச் சந்தை அமைத்திட கோரிக்கை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 03,2010,02:48 IST

சங்கராபுரம்:அரசம்பட்டு கிராமத் தில் வாரச்சந்தை அமைக்க பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.சங்கராபுரத்திலிருந்து 8,கி.மீ., தூரத்தில் உள்ள அரசம்பட்டு கிராமத்தில் 12 ஆயிரம் பேர் வசிக்கின்றனர். இப் பகுதி மக்கள் வாரச்சந்தையில் பொருட் களை

வாங்குவதற்கு சங்கராபுரத்திற்கு தான் வர வேண்டியுள்ளது.அரசம்பட்டில் வாரச் சந்தை அமைத்தால் பக் கத்து கிராமங்களான பூட்டை, பாவளம், கொசப் பாடி, செல்லம்பட்டு, பாலப்பட்டு, வட பாலப் பட்டு, மோட்டாம்பட்டி, தும்மை, பாச்சேரி உள் ளிட்ட கிராம மக்களும் பயனடைவர்.அரசம்பட்டு ஊராட்சி நிர்வாகத்திற்கும் வருவாய் கிடைக்கும். இப்பகுதியில் புதிதாக வாரச்சந்தை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென அரசம்பட்டு கிராம பொது மக்கள் கலெக்டருக்கு கோரிக்கை மனு அனுப் பியுள்ளனர்.

**விளை நிலங்கள் ரியல் எஸ்டேட்களாக மாற்றம்:உணவு உற்பத்தி பாதிக்கப்படும் அபாயம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 03,2010,02:55 IST

திருநெல்வேலி:விளை நிலங்கள் ரியல் எஸ்டேட்களாக மாற்றப்படுவதால் உணவு உற்பத்தி பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் சங்கம் கவலை தெரிவித்துள்ளது.நெல்லை கலெக்டர் அலுவலகத்தில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடந்தது. இதில் தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் கருணாநிதி தலைமையில் பலர் அளித்த மனுவில் தெரிவித்துள்ளதாவது:பாபநாசம் முதல் நெல்லை, பாளை வரை 2 போகம் நெல் விளையும் நன்செய் நிலங்கள் ரியல் எஸ்டேட்டாக மாற்றி விற்பனை செய்வதின் மூலம் நன்செய் நிலங்கள் தரிசாக்கப்பட்டு சாகுபடி குறைந்து உணவு உற்பத்தி பாதிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

நீண்ட காலமாக அணைக்கட்டுகள், கால்வாய்கள், ஓடைகள் அமைக்கப்பட்டு பாசனம் பெற்றும் சாகுபடி நடக்கும் நன்செய் நிலங்கள் அழிக்கப்படுகிறது. ஏற்கனவே பயன்படுத்தி கொண்டிருக்கும் கால்வாய்கள், குளங்கள், மடைகள் போன்றவை போதிய பராமரிப்பு பணிகள் இல்லாமல் அழியும் அபாயம் ஏற்பட்டுள்ளது.நெல்லை, பாளை பகுதிகளில் ஏராளமாக நன்செய் நிலங்கள் ரியல் எஸ்டேட்களாக மாற்றி விற்கப்படுகிறது. பாளை நாற்கர சாலை பகுதி, கொக்கிரகுளம் - குறிச்சி, நெல்லை டவுன், தச்சநல்லூர், கண்டியபேரி, தென்பத்து, பேட்டை ஆகிய பகுதிகளில் நன்செய் நிலங்கள் தரிசாக்கப்படுகிறது.

தென்பத்து கிராமத்தில் கடந்த ஆண்டு நெல் விளைந்த வயல்களை விதிகளுக்கு புறம்பாக ரியல் எஸ்டேட்டாக மாற்றியுள்ளனர்.விதிமுறைகளுக்கு புறம்பாக நன்செய் நிலங்களில் கட்டடங்கள் கட்டட அனுமதி அளிப்பதை விசாரித்து தடை செய்ய வேண்டும். தாமிரபணி மூலம் பாசனம் பெற்று உணவு உற்பத்தி செய்யப்படும் நன்செய் நிலங்கள் தொடர்ந்து சாகுபடிக்கு பயன்படுத்த வேண்டும். விளை நிலங்களை ரியல் எஸ்டேட்டாக மாற்றி விற்பனை செய்வதை தடுக்க வேண்டும்.இவ்வாறு அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.